ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1995/12 - 2016 නොවැම්බර් මස 29 වැනි අඟහරුවාදා - 2016.11.29

1995/12 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 29 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

*எனது இல.: ඉ/4/8 - ඇඹිලාපොල*
*காணி அமைச்சின் இல.:4-3/7/ 2016/HW/114*

ஒரு பகிரங்க தேவைக்கு வேண்டியதான கீழ்க் காணும் காணித் துண்டுகளை எடுத்துக் கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட் பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக் கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

வடமேல் மாகாணம், குருணாகல் மாவட்டம், நாரம்மலை பிரதேச செயலாளர் பிரிவில், உடுக்கஹ கோறளே வடக்கு சிறு பிரிவில், இல. 1071 – எம்பலாப்பொல கிராம உத்தியோகத்தர் பிரிவில், எம்பலாப்பொல கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட 2016.11.04 ஆந் திகதிய ஞ:2340 ஆம் இலக்க ஆரம்ப வரைபடத்தில் துண்டு இல. 1 தொடக்கம் 9 வரை காட்டப்பட்ட 1.1105 ஹெக்டயார் முழு விஸ்தீரண முடைய கீழ் விபரிக்கப்பட்ட ஒன்பது (09) காணித் துண்டுகள்:

1. **துண்டு இல. 1**
காணியின் பெயர்:திவுல்கஸ்பிட்டிய ஹேன; விபரம்: வீட்டுத் தோட்டம், கலப்புப் பயிர்ச் செய்கை காணப்படு கின்றது; உரிமை கோருவோர்: அரசு; ஆரம்ப உரிமை கோருவோர்: அதிகாரி முதியன்சேலாகே வசந்த குமார அதிகாரி; விஸ்தீரணம்: 0.2110 ஹெக்டயார்.

2. **துண்டு இல. 2**
காணியின் பெயர்: திவுல்கஸ்பிட்டிய ஹேன; விபரம்: தோட்டம்; உரிமை கோருவோர்: அரசு; ஆரம்ப உரிமை கோருவோர்: தெரியாது; விஸ்தீரணம்: 0.0107 ஹெக்டயார்.

3. **துண்டு இல. 3**
காணியின் பெயர்:திவுல்கஸ்பிட்டிய ஹேன; விபரம்: வாய்க்கால்; உரிமை கோருவோர்: அரசு; ஆரம்ப உரிமை கோருவோர்: தெரியாது; விஸ்தீரணம்: 0.0631 ஹெக்டயார்.

4. **துண்டு இல. 4**
காணியின் பெயர்: திவுல்கஸ்பிட்டிய ஹேன; விபரம்: தோட்டம்; உரிமை கோருவோர்: அரசு; ஆரம்ப உரிமை கோருவோர்: தெரியாது; விஸ்தீரணம்: 0.0118 ஹெக்டயார்.

5. **துண்டு இல. 5**
காணியின் பெயர்: திவுல்கஸ்பிட்டிய ஹேன; விபரம்: வீட்டுத் தோட்டம், கலப்புப் பயிர்ச் செய்கை காணப்படு கின்றது; உரிமை கோருவோர்: அரசு; ஆரம்ப உரிமை கோருவோர்: அதிகாரி முதியன்சேலாகே வசந்த குமார அதிகாரி; விஸ்தீரணம்: 0.1146 ஹெக்டயார்.

6. **துண்டு இல. 6**
காணியின் பெயர்: பல்லேகம வத்த; விபரம்: வயல்; உரிமை கோருவோர்: அரசு; ஆரம்ப உரிமை கோருவோர்: அதிகாரி முதியன்சேலாகே வசந்த குமார அதிகாரி; விஸ்தீரணம்: 0.0911 ஹெக்டயார்.

7. **துண்டு இல. 7**
காணியின் பெயர்: பல்லேகம வத்த; விபரம்: வயல்; உரிமை கோருவோர்: அரசு; ஆரம்ப உரிமை கோருவோர்:

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

அதிகாரி முதியன்சேலாகே சோமரத்ன பண்டார அதிகாரி; விஸ்தீரணம்: 0.1334 ஹெக்டயார்.

8. **துண்டு இல. 8**

காணியின் பெயர்: பல்லேகம வத்த; விபரம்: வீட்டுத் தோட்டம், கலப்புப் பயிர்ச் செய்கையும், நிலையான கட்டிட மொன்றும் காணப்படுகின்றது; உரிமை கோருவோர்: அரசு; ஆரம்ப உரிமை கோருவோர்: அதிகாரி முதியன்சேலாகே சோமரத்ன பண்டார அதிகாரி; விஸ்தீரணம்: 0.4630 ஹெக்டயார்.

9. **துண்டு இல. 9**

காணியின் பெயர்: குடாஓய; விபரம்: ஓயா; உரிமை கோருவோர்: அரசு; ஆரம்ப உரிமை கோருவோர்: தெரியாது; விஸ்தீரணம்: 0.0118 ஹெக்டயார்

மேற்குறித்த காணித் துண்டுகளுக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் (வர்த்தமானி அறிவித்தலில் பெயர் குறிப்பிடப்பட்டிருந்தாலோ அல்லது குறிப்பிடப்பட்டில்லா திருந்தாலோ) தாமாக அல்லது முறைப்படி எழுத்து மூலம் அதிகாரமளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2016 ஆம் வருடம் திசெம்பர் மாதம் 23 ஆம் திகதி மு.ப. 9.30 மணிக்கு, நாரம்மலை பிரதேச செயலகத்தில் என்முன் தோன்றும் படியும், அக் காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணித் துண்டுகளை எடுத்ததற்கான நட்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங் களையும், நட்டஈட்டுத் தொகையையும் அத் தொகை கணிக் கப்பட்ட விபரங்களையும் 2016 ஆம் வருடம் திசெம்பர் மாதம் 16 ஆம் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப் படுகின்றனர்.

இந் நட்டஈட்டு விசாரணைக்கு தமது பிரதிநிதி யொருவரை முன்வைப்பதாயின், காணி உரிமையாள ரினால் எழுத்து மூலம் அதிகாரமளிக்கப்பட்ட கடிதமொன்று இல்லாமல், அப் பிரதிநிதியின் கூற்றுகளோ சாட்சிகளோ குறித்துக் கொள்ளப்பட மாட்டாதென்பதை சுட்டிக்காட்டு கின்றேன்.

மேலும், நட்டஈட்டு விசாரணைத் திகதியும், நேரமும், காணிக்கு உரிமை கோருவோர்களுக்கு தனித் தனியாக அறிவிக்கப்படும்.

எஸ்.எம். பெத்தாவடு,
பிரதேச செயலாளர்,
நாரம்மலை.

பிரதேச செயலகம்,
நாரம்மலை,
2016, நாரம்மலை 29.

12 - 579

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.